பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

13 11 2024 6 45
புதன்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள் -</u>

1. பிரதமர் திரு நரேந்திரமோடி பீகார் மாநிலம் தர்பங்காவில் எய்ம்ஸ் மருத்துவமனைக்கு அடிக்கல் நாட்டுவது உள்ளிட்ட 12 ஆயிரத்து 100 கோடி ரூபாய் மதிப்பிலான வளர்ச்சித் திட்டங்களை இன்று தொடங்கி வைக்கிறார்.
2. ஜார்கண்ட் மாநில சட்டப்பேரவைத் தேர்தலுக்கான முதல்கட்ட வாக்குப்பதிவு இன்னும் சற்று நேரத்தில் தொடங்குகிறது.
3. பருவமழையின்போது சென்னையில் மழைநீர் தேங்காமல் இருக்க அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருப்பதாக துணை முதலமைச்சர் திரு உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.
4. சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு மாவட்டங்களிலும், டெல்டா மாவட்டங்களிலும் மழை நீடிக்கும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.
5. இந்தியா – தென்னாப்ரிக்கா அணிகளுக்கு இடையேயான மூன்றாவது டுவெண்டி – டுவெண்டி கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறுகிறது.

<u>*---- இனி விரிவான செய்திகள் ---*</u>

**[]<<<>>>[]**

பிரதமர் திரு நரேந்திரமோடி இன்று பீகார் மாநிலம் தர்பங்கா செல்கிறார்.

அங்கு நடைபெறும் நிகழ்ச்சியில் எய்ம்ஸ் மருத்துவமனைக்கு அடிக்கல் நாட்டுவது உள்ளிட்ட 12 ஆயிரத்து 100 கோடி ரூபாய் மதிப்பிலான வளர்ச்சித் திட்டங்களை அவர் தொடங்கி வைக்கிறார்.

தர்பங்காவில் எய்ம்ஸ் மருத்துவமனை ஆயிரத்து 260 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படவுள்ளது.

பீகார் மற்றும் அண்டை மாநில மக்களின் சுகாதார வசதிகளுக்கு இந்த மருத்துவமனை பெரிதும் உதவிடும் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

மேலும் அம்மாநிலத்தில் ஐயாயிரத்து 70 கோடி ரூபாய் மதிப்பிலான தேசிய நெடுஞ்சாலை திட்டங்களை தொடங்கி வைக்கும் பிரதமர், புதிய திட்டங்களுக்கும் அடிக்கல் நாட்டுகிறார்.

ஆயிரத்து 740 கோடி ரூபாய் மதிப்பிலான ரயில்வே திட்டங்களுக்கும் திரு நரேந்திரமோடி அடிக்கல் நாட்டவுள்ளார்.

நாடு முழுவதும் பல்வேறு ரயில் நிலையங்களில் அமைக்கப்பட்டுள்ள பிரதமரின் மக்கள் மருந்தகங்களையும் பிரதமர் காணொலி வாயிலாக தொடங்கி வைக்கவுள்ளார்.

இதன் மூலம் ரயில் பயணிகளுக்கு குறைந்த விலையில் மருந்துகள் கிடைப்பது உறுதி செய்யப்படும் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

**[]<<<>>>[]**

ஜார்கண்ட் மாநில சட்டப்பேரவைத் தேர்தலுக்கான முதல்கட்ட வாக்குப்பதிவு இன்னும் சற்று நேரத்தில் தொடங்குகிறது.

காலை ஏழு மணிக்கு தொடங்கும் வாக்குப்பதிவு மாலை 5 மணி வரை நடைபெறும்.

எனினும் தொள்ளாயிரத்து 50 வாக்குச்சாவடிகளில் மட்டும் மாலை நான்கு மணியுடன் வாக்குப்பதிவு நிறைவடையும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

மொத்தமுள்ள 81 தொகுதிகளில் 43 தொகுதிகளுக்கு முதல்கட்ட வாக்குப்பதிவு நடைபெறுகிறது.

இதற்காக 15 ஆயிரத்து 344 வாக்குச்சாவடி மையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக அம்மாநில தலைமைத் தேர்தல் அதிகாரி திரு ரவிக்குமார் தெரிவித்துள்ளார்.

வாக்குப்பதிவையொட்டி 200 கம்பெனி துணை ராணுவப் படையினர் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

பதற்றமான வாக்குச்சாவடிகளில் கூடுதல் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இதனிடையே பல்வேறு மாநிலங்களில் 34 சட்டப்பேரவை தொகுதிகளுக்கும், கேரள மாநிலம் வயநாடு மக்களவை தொகுதிக்கும் இடைத்தேர்தலுக்கான வாக்குப்பதிவு இன்று நடைபெறுகிறது.

**[]<<<>>>[]**

தமிழகத்தில் டெல்டா மாவட்ட இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்கும் வகையில் நாகப்பட்டினத்தில் டைடல் பூங்கா உருவாக்கப்படும் என்று மாநில தொழில்துறை அமைச்சர் திரு டி ஆர் பி ராஜா தெரிவித்துள்ளார்.

நாகை மாவட்டம் கிழக்கு கடற்கரை சாலை செல்லூர் .பகுதியில் டைடல் தொழில்நுட்ப பூங்கா அமைப்பதற்கான இடத்தை அமைச்சர் திரு அன்பில் மகேஷ் பொய்யாமொழியுடன் இணைந்து பார்வையிட்ட பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

நாகை மாவட்டத்திற்கு தொழில் வளர்ச்சியை கொண்டுவர வேண்டும் என்ற முயற்சியின் ஒரு பகுதியாக இந்த டைடல் பூங்கா அமைக்கப்பட உள்ளதாக திரு டி ஆர் பி ராஜா கூறினார்.

*( சவுண்ட்பைட் - டி ஆர் பி ராஜா ) -35--- செகண்ட்*

**[]<<<>>>[]**

தமிழகத்தில் பள்ளி மாணவிகளுக்கு எதிரான பாலியல் துன்புறுத்தல்களை தடுக்க அனைத்து பள்ளிகளிலும் மாணவர்கள் பாதுகாப்பு ஆலோசனைக் குழு அமைக்க மாநில பள்ளிக்கல்வித்துறை உத்தரவிட்டுள்ளது.

கிருஷ்ணகிரி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் பள்ளி மாணவிகளுக்கு எதிரான பாலியல் துன்புறுத்தல் சம்பவங்களில் சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராக குற்றவியல் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பள்ளிக்கல்வித்துறையின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இதனையடுத்து மாணவிகளின் பாதுகாப்பை கருத்தில் கொண்டு புகார் தெரிவிக்க ஏதுவாக பாடநூல்களின் பின்புற அட்டையில் கட்டணமில்லா தொலைபேசி எண்ணகள் அச்சிடப்படும்

பள்ளிகளில் மாணவர்கள் மனசு என்ற புகார் பெட்டி வைக்கப்படும்

மாணவ மாணவிகளை வெளியில் அழைத்துச் செல்வதற்கு பெற்றோர் மற்றும் உயரதிகாரிகளின் அனுமதி பெற வேண்டும்

மாணவ மாணவிகளிடம் ஒழுங்கீனமாக நடந்து கொள்பவர்கள் மீது காவல்துறை மூலம் நடவடிக்கை எடுக்கப்படும் என்பன உள்ளிட்ட விழிப்புணர்வு நடவடிக்கைகளை பள்ளிக் கல்வித்துறை மேற்கொண்டுள்ளதாக அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**[]<<<>>>[]**

தென்மேற்கு வங்கக்கடலில் உருவான காற்றழுத்த தாழ்வுப்பகுதி வடதமிழக கடலோரப் பகுதியை நெருங்கி உள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக வடதமிழக கடலோர மாவட்டங்கள், தெற்கு ஆந்திரா மாவட்டங்களில் இன்று மிதமான மழை பெய்ய வாய்பபு உள்ளதாக அந்த மையம் கூறியுள்ளது.

சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு மாவட்டங்களிலும், நாகை, மயிலாடுதுறை, தஞ்சாவூர் உள்ளிட்ட டெல்டா மாவட்டங்களிலும் மழை நீடிக்கும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் நேற்று இரவு முதல் விட்டு விட்டு மழை பெய்து வருகிறது.

இதற்கிடையே மயிலாடுதுறை மாவட்டத்தில் பெய்து வரும் கனமழை காரணமாக இன்று பள்ளி கல்லூரிகளுக்கு விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

கடலூர் மாவட்டத்தில் பள்ளிகளுக்கு மட்டும் விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது.

**[]<<<>>>[]**

இந்த ஆண்டு பருவமழையின்போது சென்னையில் மழைநீர் தேங்காமல் இருக்க அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருப்பதாக துணை முதலமைச்சர் திரு உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சென்னையை அடுத்த ஒக்கியம் துரைப்பாக்கம் பகுதியில் நீழ்வழிப் பாதையின் கரையோரப் பகுதிகளை அகலப்படுத்தும் பணிகளை அவர் நேற்று நேரில் ஆய்வு செய்தார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்த பணிகள் நிறைவடைந்தால் 12 ஆயிரம் கன அடி தண்ணீர் வெளியேறும் வாய்ப்பு உள்ளதாகவும், விரைந்து பணிகளை முடிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளதாகவும் கூறினார்.

அரசின் நடவடிக்கைகளுக்கு பொதுமக்களும் ஒத்துழைப்பு அளிக்க வேண்டுமென்று திரு உதயநிதி ஸ்டாலின் கேட்டுக் கொண்டார்.

[]<<<>>>[]

சபரிமலை அருள்மிகு ஸ்ரீ ஐயப்பன் கோவில் மண்டல மற்றும் மகரவிளக்கு பூஜையையொட்டி தேனி மற்றும் கேரள மாநில இடுக்கி மாவட்ட நிர்வாகம் சார்பில் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் தேக்கடியில் நேற்று நடைபெற்றது.

மாவட்ட ஆட்சியர்கள் திருமதி ஷஜீவனா, திருமதி விக்னேஸ் வரி உள்ளிட்டோர் பங்கேற்ற இக்கூட்டத்தில் பக்தர்களுக்கான அடிப்படை வசதிகளை செய்து தருவது, பாதுகாப்பு உள்ளிட்டவை குறித்து ஆலோசிக்கப்பட்டது.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய தேனி மாவட்ட ஆட்சியர் திருமதி ஷஜீவனா, பக்தர்களின் வசதிக்காக பிரத்யேக செயலி உருவாக்கப்பட்டு சபரிமலையின் பூஜை உள்ளிட்ட விவரங்களை அறிந்து கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

*( சவுண்ட்பைட் - ஷஜீவனா ) -45--- செகண்ட்*

[]<<<>>>[]

அமெரிக்காவின் புதிய தேசிய பாதுகாப்பு ஆலோசகராக மைக் **waltz** -ஐ அதிபராக தேர்வு செய்யப்பட்டுள்ள திரு டொனால்டு ட்டிரம்ப் நியமித்துள்ளார்.

[]<<<>>>[]

இலங்கை நாடாளுமன்ற தேர்தல் நாளை நடைபெறவுள்ள நிலையில் அதற்கான ஏற்பாடுகள் முழுவீச்சில் நடைபெற்று வருகின்றன.

[]<<<>>>[]

பாகிஸ்தானின் கீல்ஜித் - பல்ஜிஸ்தான் இடையே ஆற்றில் பேருந்து கவிழ்ந்து நேரிட்ட விபத்தில் 16 பேர் உயிரிழந்தனர்.

[]<<<>>>[]

அஜர்பைஜானின் பாகு நகரில் நடைபெறும் பருவநிலை மாற்றம் தொடர்பான மாநாட்டில் பல்வேறு அமைப்புகளுடன் இணைந்து இந்தியா கரியமில வாயு அகற்றம் தொடர்பான நிகழ்ச்சிகளை நடத்தவுள்ளது.

[]<<<>>>[]

நாட்டின் மொத்த புதுப்பிக்கத்தக்க எரிசக்தி நிறுவு திறன் கடந்த ஓராண்டில் 24 புள்ளி இரண்டு ஜிகாவாட்டாக அதிகரித்துள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

[]<<<>>>[]

மணிப்பூரில் ஜிரிபம் மாவட்டத்தில் தீவிரவாதிகளால் கடத்திச் செல்லப்பட்டவர்களில் இரண்டு பேரின் உடல்களை பாதுகாப்புப் படையினர் நேற்று கண்டெடுத்தனர்.

[]<<<>>>[]

திருவண்ணாமலை கார்த்திகை தீபத் திருவிழாவில் முக்கிய பிரமுகர்களுக்கு அனுமதி அட்டை வழங்குவதை மாவட்ட நிர்வாகம் முறைப்படுத்த வேண்டுமென்று மாநில அமைச்சர் திரு ஏ வ வேலு கேட்டுக் கொண்டுள்ளார்.

[]<<<>>>[]

மழை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக தூத்துக்குடி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் மாநில அமைச்சர் திருமதி கீதா ஜீவன் நேற்று ஆய்வு மேற்கொண்டார்.

[]<<<>>>[]

அரியலூரில் சிப்காட் தொழிற்சாலை அமையவுள்ள இடம் மற்றும் சாலை மேம்பாட்டுப் பணிகளை மாநில அமைச்சர் திரு ஏ வ வேலு நேற்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

[]<<<>>>[]

காஞ்சிபுரம் மாவட்டம் சேந்தமங்கலம் கிராமத்தில் மக்கள் தொடர்பு திட்ட முகாம் ஆட்சியர் திருமதி கலைச்செல்வி மோகன் தலைமையில் இன்று நடைபெறுகிறது.

[]<<<>>>[]

இந்தியா – தென்னாப்ரிக்கா அணிகளுக்கு இடையேயான மூன்றாவது டுவெண்டி – டுவெண்டி கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறுகிறது.

தென்னாப்பிரிக்காவின் செஞ்சூரியனில் இப்போட்டி இரவு எட்டரை மணிக்கு தொடங்குகிறது.

**[]<<<>>>[]**

மொனாக்கோவில் நடைபெற்று வரும் மாண்டிக் கார்லோ ஸகுவாஷ் போட்டியில் இந்தியாவின் ஜோஸ்னா சின்னப்பா காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

***End of News***